**காப்பு - விநாயகவணக்கம் பாடல் - ௦௦ –00.**

வண்மை தரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
உண்மை விளக்கம் உரை செய்யத் - திண்மதஞ்சேர்
அந்தி நிறத் தந்திமுகத் தொந்திவயிற்று ஐங்கரனைப்
பந்தமறப் புந்தியுள் வைப்பாம்.

**மாணவர் ஆசிரியரிடம்வேண்டுதல் - பாடல் - ௦௧ –01.**

பொய்காட்டிப் பொய்அகற்றிப் போதானத்தப் பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய் விண்ணப்பம், - பொய்காட்டா
மெய்யா, திருவெண்ணை வித்தகா, சுத்தவினா,
ஐயா, நீதான் கேட்டருள்.

**மாணவர்கேட்கும் வினாக்கள் - பாடல் - ௦௨ –02.**

ஆறாறு தத்துவம்ஏது? ஆணவம்ஏது? அன்றேதான்
மாறா வினைஏது? மற்றிவற்றின் - வேறாக
நான்ஏது? நீஏது? நாதன்நடம் அஞ்செழுத்துத்
தான்ஏது? தேசிகனே சாற்று.

**ஆசிரியர் விடைகூறப்புகுதல் - பாடல் - ௦௩ - 03**

உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்தனக்கு,
வள்ளல் அருளால் அன்று வாய் மலர்ந்த - தெள்ளிய சீர்
ஆகமங்கள் சொன்ன அடைவிலே, ஆனந்தயோகம்
நிகழ் புதல்வா உற்று.

**ஐம்பூதங்களின் அனுவடிவு - பாடல் - ௦௪ - 04.**

நாற்கோணம் பூமி, புனல் நண்ணு மதியின் பாதி,

ஏற்கும் அனல் முக்கோணம், எப்போதும் - ஆர்க்கும்

அறுகோணம் கால், வட்டம் ஆகாயம், ஆன்மா உறுகாயம் ஆம்

இவற்றால் உற்று.

**பூதங்களின் நிறமும்எழுத்தும் - பாடல் - ௦௫ - 05.**

பொன்பார் புனல் வெண்மை, பொங்கும் அனல் சிவப்பு,

வன்கால் கருமை, வளர் வான் தூமம் - என்பார்,

எழுத்து ல வ ர ய அ பாராதிக்கு என்றும்

அழுத்தமதாய் நிற்கும் அது.

**பூதங்களின் அடையாளம் - பாடல் - ௦௬ - 06.**

குறி குலிசம் கோகனதம் கொள் சுவத்தி குன்றா அறுபுள்ளி

ஆரமுதவிந்து - பிறிவின்றி

மண் புனல் தீக் கால் வானம், மன்னும் அடைவே என்று

ஒண்புதல்வா ஆகமம் ஓதும்.

**அதிதெய்வங்களும் அவர்கள்தொழில்களும் தொகுத்துக்கூறுதல் - பாடல் - ௦௭ - 07.**

பாராதி ஐந்துக்கும் பன்னும் அதிதெய்வங்கள் ஆர்ஆர்,

அயன் ஆதி ஐவராம் - ஓரோர்

தொழில் அவர்க்குச் சொல்லுங்கால்

தோற்ற முதல் ஐந்தும் பழுதறவே பண்ணுவர்கள் பார்.

**அதிதெய்வங்களின் தொழில்களை வகுத்துக்கூறுதல் - பாடல் - ௦அ - 08.**

படைப்பன் அயன், அளிப்பன் பங்கயக்கண் மாயன்,
துடைப்பன் உருத்திரனும், சொல்லில் - திடப்பெறவே
என்றும் திரோபவிப்பர் ஈசர், சதாசிவரும் அன்றே அனுக்கிரகர் ஆம்.

**பூதங்களின் குணமும்செயலும் - பாடல் - ௦௯ - 09.**

மண் கடினமாய் தரிக்கும், வாரி குளிர்ந்தே பதமாம்,
ஒண்கனல் சுட்டு ஒன்றுவிக்கும், ஓவாமல் - வண்கால்
பரந்து சலித்துத் திரட்டும், பார்க்கில் ஆகாயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து.

**ஐம்புலன் தன்மாத்திரைகள் - பாடல் - க௦ - 10.**

உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்தனக்குக்
கள்ளமிகும் ஐம்புலனும் கட்டுரைக்கில் - மெள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவை நாற்றம்
ஆசை தரும் ஐம்புலனேயாம்.

**ஞானேந்திரியங்கள் - பாடல் - கக - 11.**

ஞானேந்திரியங்கள் நன்றா உரைக்கக்கேள்;
ஊனமிகு பூதம் உற்றிடமா - ஈனமாம்
சத்தாதியை அறியும், தானம் செவி தோல் கண்
அத்தாலு மூக்கென்று அறி.

**ஞானேந்திரியங்கள் அறியும்முறை - பாடல் - கஉ - 12.**

வான் இடமா நின்று செவி மன்னும் ஒலியதனை ;

ஈனமிகும் தோல் கால் இடமாக - ஊனப்பரிசம் தனை அறியும்,

பார்வையின் கண் அங்கி விரவி உருவம் காணுமே.

**ஞானேந்திரியங்கள் அறியும்முறை தொடர்ச்சி - பாடல் - கஙு - 13.**

நன்றாக நீர் இடமா நா இரதம் தான்அறியும் ;

பொன்றா மணம் மூக்கு பூ இடமா - நின்று அறியும்,

என்று ஓதும் அன்றே இறைஆகமம் ;

இதனை வென்றார் சென்றார் இன்பவீடு.

**கன்மேந்திரியங்கள் - பாடல் - கச - 14.**

கண்ணுதல்நூல் ஓதியிடும் கன்மேந்திரியங்கள்

எண்ணும் வசனாதிக்கு இடமாக - நண்ணியிடும்

வாக்குப் பாதம் பாணி மன்னு குதம் உபத்தமாக்

கருதும் நாளும் அது.

**கன்மேந்திரியங்கள் செயற்படும்முறை - பாடல் - கரு - 15.**

வாக்கு ஆகாயம் இடமா வந்து வசனிக்கும் ;

கால் போக்காரும் காற்றிடமாய் ; புல்கி அனல் - ஏற்கும் இடம் கை,

குதம் நீர் இடமா மலாதி விடும்,

பார் இடம் உபத்தம் விந்து.

**அந்தக்கரணம் நான்கின் வரிசை - பாடல் - கசு - 16.**

அந்தக் கரணம் அடைவே உரைக்கக் கேள்;

அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் - சிந்தை இவை

பற்றி அது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்து, அங்கு

உற்றது சிந்திக்கும் உணர்.

**வித்தியாதத்துவங்களைக் கூறத்தொடங்குதல் - பாடல் - கஎ - 17.**

ஓதியிடும் நாலாறும் உற்ற ஆன்ம தத்துவம் என்று

ஆதி அருள்நூல் அறையும்காண் - தீதறவே

வித்தியா தத்துவங்கள் தம்மை விளம்பக்கேள்,

உத்தமனே நன்றா உனக்கு.

**வித்தியா தத்துவங்களின் பெயர்கள் - பாடல் - கஅ – 18.**

காலம், நியதி, கருதும் கலை, வித்தை,

ஏல அராகம், புருடனே, மாயை, - மால்அற ஏழ்

சொன்னோம், அடைவாகச் சொன்ன இவை, தம் உண்மை

உன்னி உரைக்கும் நாம் உற்று.

**வித்தியா தத்துவங்களின் தொழில் - பாடல் - கசூ - 19.**

எல்லைபலம் புதுமை, எப்போதும் நிச்சயித்தல்,

அல்லல் தரும் கிரியை ஆன்மாவுக்கு, - ஒல்லை

அறிவு, ஆசை, ஐம்புலனும் ஆரவரும் காலம்,

குறியா மயக்கு, என்று கொள்.

**சுத்த தத்துவங்களின் பெயர்கள் - பாடல் - உ0 - 20.**

வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்,

சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள் - நித்தமாம்

சுத்தவித்தை, ஈசுரம், பின்சொல்லும் சதாசிவம்,

நல்சத்தி, சிவம், காண் அவைகள் தாம்.

**சுத்த தத்துவங்களின் நிலை - பாடல் - உக - 21.**

சுத்தவித்தை ஞானம்மிகும், தொன்மையாம் ஈசுரம் தான்

அத்தன் தொழில் அதிகம் ஆக்கிவிடும், - ஒத்தவிவை

சாதாக்கியம், என்றும் சத்தி சிவம், கிரியை,

ஆதார ஞானஉரு, ஆம்.

**பாசமாகிய ஆணவமும் வினையும் - பாடல் - உஉ – 22.**

ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக,

மாற மலம் இரண்டும் வா சொல்லக் - கூறில்,

அறியாமை ஆணவம், நீயான சுக துக்கம்

குறியா வினை, என்று கொள்.

**நான் யார் - பாடல் - உ௩ - 23.**

ஆறாறு தத்துவமும், ஆணவமும், வல்வினையும்

மாறா அருளால் வகுத்து உரைத்தீர், - வேறாகா

என்னை, எனக்கு அறியக் காட்டீர், இவைகண்டேன்

உன்னரிய தேசிகரே உற்று.

**ஆன்மாவின் இயல்பு - பாடல் - உச - 24.**

நன்றா உரைக்கக்கேள், நல்லசித்தின் முன் அசித்து இங்கு
ஒன்றாது, சித்து அசித்தை ஓராது, - நின்று இவற்றை
அன்றே பகுத்தறிவது ஆன்மாவே என்று
மறை குன்றாமல் ஓதும் குறித்து.

**தத்துவங்கள் தம்மைத்தாம் அறியாது - பாடல் - உரு - 25.**

தத்துவங்கள் ஆறாறும் தம்மைத்தாம் என்று அறியா,
எத்தன்மை என்னில் இயம்பக்கேள், - சுத்தமாம்
ஆறு சுவையும் அறியாவே தம்மைத்தாம்,
கூறில் அவை இவை போல் கொள்.

**தத்துவங்களை அறிவது உயிர் - பாடல் - உசூ – 26.**

ஆறு சுவையும் அருந்தி அவைதம்மை
வேறொருவன் கூறியிடும் மேன்மைபோல், - ஆறாறும்
ஒன்றுஒன்றா நாடி உணர்ந்து ஓதில், அதில் உற்று அறிவாய்,
நின்ற பொருள் தானே காண் நீ.

**இறைவன் வேறாய் நிற்றல் - பாடல் - உஎ - 27.**

குன்றா அருளாலே கூறினீர் என்வடிவு,
பொன்றாத நும் உருவம் போதியீர், - நின்று அருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே, உனது அறிவில்
நண்ணி அறிவித்திடுவோம் நாம்.

**இறைவன் ஒன்றாய் நிற்றல் - பாடல் - உஅ - 28.**

அன்றியும் கேள், ஆன்மாவால் ஆய்ந்து அறியும் ஐம்பொறிகள்
இன்றி அறியா இவைஎன்ன - நின்றதுபோல்
ஓவாமல் உன்னை உணர்த்துவோம் உன்அறிவில்
மேவாமல் மேவி நாமே.

**இறைவன் உடனாய் நிற்றல் - பாடல் - உகூ - 29.**

அக்கரங்கட்கு எல்லாம் அகர உயிர் நின்றாற்போல்,
மிக்க உயிருக்கு உயிராய் மேவினோம், - எக்கண்ணும்
நில்லா இடத்து உயிர்க்கு நில்லாது அறிவு என்று,
நல்ஆகமம் ஓதும் நாடு.

**நாதன் நடம் - இறைவன் புரியும் ஆடலின் இயல்பைக் கூற வேண்டுதல் - பாடல் - ௩0 - 30.**

நற்றவத்தோர் தாம்காண, நாத அந்தத்து அஞ்செழுத்தால்
உற்று உருவாய் நின்று, ஆடல் உள்ளபடி - பெற்றிட நான்,
விண்ணார் பொழில் வெண்ணை மெய்கண்ட நாதனே,
தண்ணார் அருளாலே சாற்று.

**திருநடனம் செய்யும் இடம் - பாடல் - ௩க - 31.**

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக் கேள், - சிட்டன்
சிவாயநம என்னும் திருஎழுத்து அஞ்சாலே,
அவாயம் அற நின்று ஆடுவான்.

**அஞ்செழுத்து உரு - பாடல் - ௩௨ - 32.**

ஆடும் படிகேள் நல் அம்பலத்தான் ஐயனே,

நாடும் திருவடியிலே **ந**கரம், - கூடும்

**ம**கரம் உதரம், வளர்தோள் **சி**கரம்,

பகரும் முகம் **வா**, முடி **ய**ப் பார்.

**அஞ்செழுத்து உரு - பாடல் - ௩௩ - 33.**

சேர்க்கும் துடி **சி**கரம், சிற்கன**வா** வீசுகரம்,

ஆர்க்கும் **ய**கரம் அபயகரம், - பார்க்கில் இறைக்கு

அங்கி **ந**கரம், அடிக்கீழ் முயலகனார்

தங்கும் **ம**கரம், அது தான்.

**ஓம்காரமும் இறைவன் திருவுருவும் - பாடல் - ௩௪ - 34.**

ஓங்காரமே நல் திருவாசி, உற்று அதனில்

நீங்கா எழுத்தே நிறை சுடராம், - ஆங்காரம்

அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடல், இது

பெற்றார் பிறப்பு அற்றார் பின்.

**ஊன நடனம் ( தூல, சூக்கும, அதிசூக்கும நடனங்கள் ) - பாடல் - ௩௫ - 35.**

தோற்றம் துடியதனில், தோயும் திதி அமைப்பில்,

சாற்றியிடும் அங்கியிலே சங்காரம், - ஊற்றமா

ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம், முத்தி

நான்ற மலர்ப்பதத்தே, நாடு.

**ஞான நடனம் - பாடல் - ௩௬ - 36.**

மாயைதனை உதறி, வல்வினையைச் சுட்டு, மலம்

சாய அமுக்கி, அருள் தான் எடுத்து, - நேயத்தால்

ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல் தான்,

எந்தையார் பரதம் தான்.

**ஆனந்த நடனம் - பாடல் - ௩௭ - 37.**

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்

தான் அந்தம் ஆன இடத்தே தங்கியிடும் - ஆனந்தம்

மொண்டு அருந்தி நின்று, ஆடல் காணும் அருள் மூர்த்தியாகக்

கொண்ட திரு அம்பலத்தான் கூத்து.

**தொழுவார் பெறும் பயன் - பாடல் - ௩௮ - 38.**

பரை இடமா நின்று மிகு பஞ்சாக்கரத்தால்

உரை உணர்வுக்கு எட்டா ஒருவன், - வரைமகள் தான்

காணும் படியே கருணை உருக் கொண்டு ஆடல்

பேணும் அவர்க்கு உண்டோ பிறப்பு.

**அஞ்செழுத்துப் பற்றிய ஐயம் - பாடல் - ௩௯ - 39.**

நாதாந்த நாடகத்தை நன்றா அருள் செய்தீர்,

ஓதீர் எழுத்து அஞ்சும் உள்ளபடி - தீது அறவே,

அஞ்செழுத்து ஈது ஆகில், அழியும் எழுத்தாய் விடுமோ,

தஞ்ச அருள் குருவே சாற்று.

**அழியா எழுத்து - பாடல் - ௪௦ - 40.**

உற்ற குறி அழியும், ஓதுங்கால் பாடைகளில்

சற்றும் பொருள்தான் சலியாது, - மற்றது கேள்,

ஈசனருள் ஆவி எழிலார் திரோதமலம்,

ஆசில் எழுத்து அஞ்சின் அடைவாம்.

**நிற்கும் முறை, ஓதும் முறை - பாடல் - ௪௧ - 41.**

சிவனருள் ஆவி, திரோதம் மலம் ஐந்தும்,

அவன் எழுத்து அஞ்சின் அடைவாம், - இவன் நின்று

**ந**ம் முதலா ஓதில் அருள் நாடாது, நாடும் அருள்

**சி**ம் முதலா ஓது நீ சென்று.

**எய்தும் பயன் - பாடல் - ௪௨ - 42.**

அண்ணல் முதலா அழகார் எழுத்து ஐந்தும்

எண்ணில், இராப்பகல் அற்ற இன்பத்தே - நண்ணி

அருளானது சிவத்தே ஆக்கும் அணுவை

இருளானது தீர இன்று.

**முக்தி பஞ்சாக்கரம் - பாடல் - ௪௩ - 43.**

ஆதி மலம் இரண்டும் ஆதியா ஓதினால்

சேதியா மும்மலமும் தீர்வாகா, - போதம்

மதிப்பு அரிதாம் இன்பத்தே வாழலாம், மாறி

விதிப்படி ஓது அஞ்செழுத்துமே.

**திருவைந்தெழுத்தின் சிறப்பு - பாடல் - சச - 44.**

அஞ்செழுத்தே ஆகமமும், அண்ணல் அருமறையும்,

அஞ்செழுத்தே ஆதி புராணம் அனைத்தும், - அஞ்செழுத்தே

ஆனந்த தாண்டவமும், ஆறாறுக்கு அப்பாலாம்

மோனந்த மா முத்தியும்.

**சிவத்தில் அத்துவிதமாய் இயைந்து நிற்றற்கு உவமைகள் - பாடல் - சரு - 45.**

முத்திதனை அடைந்தோர் முந்துபழம் போது அங்கி

வித்தகமாம் வீணை இவையிற்றின் - ஒத்த

இரதமணம் வெம்மை எழில் நாதம் போல

விரவுவர் என்று ஓதும் விதி.

**மேலும் ஓர் உவமை - பாடல் - சகூ - 46.**

தத்துவங்கள் எல்லாம் சாகசமாய் ஆன்மாவில்

பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல், - முத்திதனில்

சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்று மறை

சத்தியமா ஓதியிடும் தான்.

**பின்னும் ஓர் உவமை - பாடல் - சஎ - 47.**

ஆதவன் தன் சன்னதியில் அம்புலியினார் சோதி

பேதமற நிற்கின்ற பெற்றிபோல், - நாத அந்தத்து

அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்து இன்பக்

கண்ணில் அழுந்தியிடும் காண்.

**முத்தி நிலை உயிருக்கு இயற்கை - பாடல் - சஅ - 48.**

சென்றிவன் தான் ஒன்றில் சிவபூரணம் சிதையும்,

அன்றவன் தான் ஒன்றும் எனில் அந்நியமாம், - இன்று இரண்டும்

அற்றநிலை எதுஎன்னில் ஆதித்தன் அந்தன்விழிக்

குற்றமற நின்றது போல், கொள்.

**முத்தியில் முப்பொருள் எவ்வாறு இருக்கும் - பாடல் - சகூ - 49.**

வாக்கு மனம் இறந்த வான் கருணையாளன் உருத்

தாக்கு அறவே நிற்கும்  தனிமுதல்வா, - நீக்காப்

பதியினைப்போல் நித்தம் பசுபாசம் என்றாய்,

கதியிடத்து மூன்றினையும் காட்டு.

**முத்தியில் முப்பொருள் உள்ள நிலைமை - பாடல் - ருo - 50.**

முத்திதனில் மூன்று முதலும் மொழியக் கேள்,

சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு, - மெத்தவே

இன்பம் கொடுத்தல் இறை, இத்தை விளைவித்தல் மலம்,

அன்புடனே கண்டுகொள், அப்பா.

**முத்திக்கு வழி - பாடல் - ருக - 51.**

அப்பா, இம்முத்திக்கு அழியாத காரணந்தான்

செப்பாய் அருளாலே, செப்பக் கேள், - ஒப்பில்

குருலிங்க வேடமெனக் கூறில், இவை கொண்டார்

கருவொன்றி நில்லார்கள் காண்.

**முத்தித் தலைவர் - பாடல் - ருஉ - 52.**

கற்றா மனம்போல் கசிந்து கசிந்தே உருகி
உற்றாசான் லிங்கம் உயர்வேடம் - பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவார் பார்.

**மாணவரின் நன்றியுரை - பாடல் - ருங - 53.**

வாழ்ந்தேன் அருட்கடலே, வற்றாப் பவக்கடலில்
வீழ்ந்தே அலையாமல் மேதினியில், - சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே,
உண்மை தவப்பயனே உற்று.